தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் பயிர்களின் வளர்ச்சி மற்றும் விளைச்சலை அதிகரிப்பதுடன் தரத்தையும் உயர்த்தும் பயிர் பூஸ்டர்ஸ்

தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக பயன் அளிக்கும் விதத்தில் **TNAU தென்னை டானிக்** என்ற தொழில் நுட்பத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயிர் வினையியல் துறை 2003 ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. இந்த தென்னை டானிக்கை தமிழ்நாடு மட்டுமில்லாமல் கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் உள்ள தென்னை விவசாயிகள் கடந்த 12 ஆண்டுகளாக உபயோகித்து பயன் அடைந்துள்ளனர். இந்த வெற்றிக்கு பின்னர், பயறு வகை பயிர்கள், கரும்பு, பருத்தி, மக்காச்சோளம் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு பூஸ்டர்களை தற்போது இத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பயிர் பூஸ்டர்கள், மேற்கண்ட பயிர்களின் வளர்ச்சி மற்றும் விளைச்சலை அதிகரிப்பதுடன் தரத்தையும் உயர்த்துகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் வினையியல் துறை, கீழ்கண்ட பூஸ்டர்களை ஆண்டு முழுவதும் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

### TNAU தென்னை டானிக்

தென்னைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த டானிக்

**பயன்கள்**

- பச்சையம் அதிகரிக்கும்
- ஒளிச்சேர்க்கை திறன் கூடும்
- பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்
- குரும்பை கொட்டுதல் குறையும்
- காய்கள் பெரிதாகி பருப்பு எடை கூடும்
- விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும்
- பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தி கூடும்

ஒரு வருடத்திற்கு இரண்டு பாக்கெட் (200 மி.லி.) டானிக்கை 6 மாத இடைவெளியில் வேர் மூலம் கொடுக்க வேண்டும்

**அடர்திரவ டானிக் விலைப்பட்டியல்**

| விளக்கம் | 1 லிட்டர் (25 மரங்கள்) | 2 லிட்டர் (50 மரங்கள்) | 5 லிட்டர் (125 மரங்கள்) | 10 லிட்டர் (250 மரங்கள்) | 20 லிட்டர் (500 மரங்கள்) |
|---|---|---|---|---|---|
| டானிக் விலை (ரூபாய்) | 250/- | 500/- | 1250/- | 2500/- | 5000/- |
| கேன் விலை (ரூபாய்) | 10/- | 15/- | 40/- | 60/- | 110/- |
| அனுப்பப்படும் செலவு (ரூபாய்) | 45/- | 45/- | 50/- | 55/- | 65/- |
| மொத்தம் (ரூபாய்) | 305/- | 560/- | 1340/- | 2615/- | 5175/- |

1 லிட்டர் அடர் திரவ டானிக்குடன் 4 லிட்டர் குடிநீர் சேர்த்து 5 லிட்டராக்கி 200 மி.லி. வீதம் 25 மரங்களுக்கு கொடுக்கலாம்.

## TNAU பயறு ஒண்டர்

பயறு வகைகளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்

**பயன்கள்**

- பூக்கள் உதிர்வது குறையும்
- பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும்
- வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்

**பயன்படுத்தும் முறை**

- அளவு : ஏக்கருக்கு 2 கிலோ
- தெளிப்பு திரவம் : 200 லிட்டர்
- தெளிக்கும் பருவம் : பூக்கும் பருவம்
- தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்
- விலை : ரூ. 200 / கிலோ

## TNAU நிலக்கடலை ரிச்

நிலக்கடலைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்

**பயன்கள்**

- அதிக பூ பிடிக்கும் திறன்
- குறைந்த பொக்கு கடலைகள்
- விளைச்சல் 15 சதம் வரை கூடும்
- வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்

**பயன்படுத்தும் முறை**

- அளவு : ஏக்கருக்கு 2 கிலோ
- தெளிப்பு திரவம் : 200 லிட்டர்
- தெளிக்கும் பருவம் : பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவம்
- தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்
- விலை : ரூ. 200 / கிலோ

## TNAU பருத்தி பிளஸ்

பருத்திக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்

**பயன்கள்**

- பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும்
- காய்கள் முழுமையாக வெடித்து, சீரான அறுவடைக்கு வழி வகுக்கிறது
- விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கும்
- வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்

**பயன்படுத்தும் முறை**

- அளவு : ஏக்கருக்கு 2.5 கிலோ
- தெளிப்பு திரவம் : 200 லிட்டர்
- தெளிக்கும் பருவம் : பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவம்
- தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்
- விலை : ரூ. 200 / கிலோ

## TNAU கரும்பு பூஸ்டர்

கரும்பிற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்

**பயன்கள்**

- இடைக்கணுக்களின் நீளம் கூடும்
- கரும்பின் வளர்ச்சி மற்றும் எடை அதிகரிக்கும்
- விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும்
- சர்க்கரை கட்டுமானம் கூடும்
- வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்

**பயன்படுத்தும் முறை**

- அளவு : ஏக்கருக்கு 1, 1.5 மற்றும் 2 கிலோ
- தெளிப்பு திரவம் : 200 லிட்டர்
- தெளிக்கும் பருவம் : கரும்பு நட்ட 45, 60 மற்றும் 75 ஆவது நாட்களில்
- தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்
- விலை : ரூ. 350 / கிலோ

**TNAU மக்காச்சோள மேக்சிம்**

மக்காச்சோளத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்

**பயன்கள்**

- மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும்
- விளைச்சல் 20 சதம் வரை கூடும்
- வறட்சியைத் தாங்கும் திறன் அதிகரிக்கும்

**பயன்படுத்தும் முறை**

- அளவு : ஏக்கருக்கு 2 கிலோ
- தெளிப்பு திரவம் : 200 லிட்டர்
- தெளிக்கும் பருவம் : ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவம்
- தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்
- விலை : ரூ. 300 / கிலோ

<u>மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் வினையியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி 0422-6611243

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்